**தலைப்பு 197 - திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 197 - திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 04 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள்,அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 8,798.71 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 6,448.14 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 2,350,57 மில்லியன் அல்லது 26.71 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2, 889.49 | 2, 849.06 | 40.43 | 1.40 |
| மூலதனம் | 5, 909.22 | 3, 599.08 | 2310.14 | 39.09 |
| **மொத்தம்** | **8,798.71** | **6,448.14** | **2350.57** | **26.71** |

**2.2 முற்பணக் கணக்கு**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான 19701 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லின் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10.00 | 7.47 | 6.00 | 6.42 | 40.00 | 35.28 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழான 7002/0000/00/0444/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2015 தசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 82,472 ஆகும்.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் கீழுள்ள 03 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,936,618 ஆகும். விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0113/0126/000 | 183,677 |
| 6000/0000/00/0016/0116/000 | 28,749,207 |
| 6000/0000/00/0012/000 | 3, 734 |
| | **28, 936, 618** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3.1 மற்றும் 3.8 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டுமுரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,625,000 கூட்டுத்தொகையான மொத்த நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பாடாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 11 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணத்தால் அந்த செலவின விடயங்களின் நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான மீதி தேறிய நிதியேற்பாட்டில் 76 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 94 (i) இற்கு முரணாக 10 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னரான மீதி ரூபா 1,851,132 இனை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

## 3.3 பொது வைப்புக் கணக்குகள்

2 வருடங்களுக்கு மேற்பட்ட 291,557 கூட்டுத்தொகையான 03 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

19701 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியிள் உள்ளவாறு ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 453, 883 ஆக இருந்ததுடன், அந்த நிலுவைக் கடன் மீதிகள் 01 முதல் 05 வருடங்கள் வரையான காலவீச்சில் முன்கொண்டு வரப்பட்டிருந்த தெனினும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பிரதான உள்ளக கணக்காய்வாளர், உள்ளகக் கணக்காய்வாளர் (கணக்காளர்) தவிர கணக்காய்வு பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தார். போதியளவான பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கணக்காய்வொன்றினை மேற்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் முதல் அரையாண்டினுள் 05 விசேட புலனாய்வுகள் உள்ளடங்கலாக 10 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது அரையாண்டினுள் கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வுப் பணிகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வு கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடியாது போயிருந்தது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சிற்குரிய ரூபா 41,933,877 பெறுமதியான 05 வாகனங்களின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததெனினும், அந்த வாகனங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையாக கையளிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.7 **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| **(அ) அமைச்சரவைத் தீர்மானம்**<br>2015 செப்தம்பர் 22 ஆந் திகதிய அமப/15/1280/719/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி முன்னாள் அமைச்சரொருவர் பயன்படுத்திய ஜீப் வண்டியொன்று 2015 நவம்பர் 22 ஆந் திகதி வரையிலும் அமைச்சிற்கு உரிய முறையில் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**<br>நிதிப் பிரமாணம் 104 (1) | 2015 ஒக்தோபர் 03 ஆந் திகதி அமைச்சிற்குரிய வாகனமொன்று விபத்துக்குள்ளாகியமையால் ஏற்பட்ட சேத நட்டங்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை**<br>(i) 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2015 யூலை 17 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/92 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் (1) ஆம் பிரிவு | (i) அமைச்சர்களின் பதவியணிக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனங்கள் 2015 யூலை 20 ஆந் திகதிக்கு முன்னர் கையளிக்கப்பட வேண்டுமெனினும், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சரின் முன்னாள் அமைச்சரொருவரின் பிரத்தியேக பதவியணிக்கு வழங்கப்பட்டிருந்த ஐந்து வாகனங்களில் மூன்று வாகனங்கள் மற்றும் அமைச்சின் பதவியணிக்கு வழங்கப்பட்டிருந்த குழாம் வாகனம் சுமார் ஒரு மாத தாமதத்தின் பின்னர் 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.<br>(ii) இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தமாட்டாதென குறிப்பிடப்பட்டிருந்த வாகனமொன்று அமைச்சிற்கு கையளிக்கப்படாமல் தேர்தல்கள் காலப்பகுதியினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) 2015 யூலை 17 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/92 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் (1) ஆம் பந்தி மற்றும் 2015 யூலை 19 ஆந் திகதிய | தேர்தல்கள் காலப்பகுதியினுள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் முன்னாள் அமைச்சரொருவரால் பயன்படுத்தப்பட்ட மூன்று வாகனங்களுக்காக செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 300,000 தொகையான பணம் மற்றும் எரிபொருள் படிகளாக செலுத்தப்பட்ட ரூபா 201,705 தொகையான |

| | |
|---|---|
| DE.LI/04/2015(PE) ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1.1.1 ஆம் பந்தி | பணம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை**

------------------------------------

| | |
|---|---|
| 2015 மார்ச் 31 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | உற்பத்தி செய்யப்பட்டு 10 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான வீச்சில் பழமையான விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்படும் 07 வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக அல்லது கைதவிர்ப்பதற்கு உரிய நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.8 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

------------------------------------------------------

தொழில்சார் பயிற்சி துறையின் பொருண்மையானதும் தரமானதுமான அபிவிருத்தியொன்றிற்காக ஒட்டுமொத்த தொழில் பயிற்சி துறையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஏழு வருட திட்டமொன்றின் அடிப்படையில் துறைரீதியான திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 ஆம் ஆண்டு முதல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் ஒட்டுமொத்த செலவின மதிப்பீடு ரூபா 125,891 மில்லியன் (ஐ.அ.டொலர் 961 மில்லியன்) ஆக இருந்தது. இதற்காக வரவு செலவு திட்ட உதவி முறைமையின் கீழ் ஐ.அ.டொலர் 100 மில்லியன் வீதம் சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றால் கடன் வழங்குவதற்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவில் துறையுடன் இணைந்ததாக செயற்படும் 10 நிறுவனங்களூடாக நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு இருந்தது. 9 செலவின குறிகாட்டிகளின் கீழ் ((Disbursement Link Indicators (DLI)) திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு நிறைவடையும் போது ரூபா 8,541 மில்லியன் தொகையான வெளிநாட்டு கடன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய அனைத்து பணிகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கிரயம் உள்ளடங்கும் வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறுவதில் மந்தமான நிலையொன்று 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திறனூடாக பிரதிபலிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான செயன்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் 74 நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்காக ரூபா 3,520.78 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 44 நிகழ்ச்சித்திட்டங்களை மாத்திரம் நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 1,374.30 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(இ) இதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கான இயலுமை தொடர்பில் அச்சமொன்று நிலுவுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.9 செயலாற்றல்

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிச்சி அமைச்சினால் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான திறன்களால் வலுவூட்டப்பட்ட தொழில் புரியக்கூடிய ஊழியப்படையொன்றினை உருவாக்குதல் பிரதான நோக்கமாக இருந்தது. அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வருடாந்தம் பாடசாலைக் கட்டமைப்பிலிருந்து வெளியேறும் மாணவர்களை தொழில்சார் பயிற்சி துறைக்கு ஈடுபடுத்தலும் எதிர்கால வேலை வாய்ப்புகளுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் தரமான தொழில் பயிற்சியொன்றினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் கீழியங்கும் நிறுவனங்களின் வெவ்வேறு துறைகளுக்குரிய 477 தொழில் நிலையங்கள் நாடெங்கிழும் நிறுவப்பட்டிருந்தன. எனினும் வருடாந்தம் பாடசாலைக் கட்டமைப்பிலிருந்து வெளியேறும் மாணவர்களில் கணிசமான அளவானோருக்கு தொழில் பயிற்சியினை வழங்குவதற்கு தேவையான வசதிகள் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கல்வி அமைச்சின் அறிக்கைகளுக்கமைய 2014 ஆம் ஆண்டினுள் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) மற்றும் (உயர்தரம்) சித்தியடையாமல் பாடசாலைக் கட்டமைப்பிலிருந்து வெளியேறிச்சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 195,062 ஆக இருந்தது. திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து தொழில் பயிற்சி நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டினுள் காணப்படும் வளங்களின் பிரகாரம் முழுநேர தொழில் பயிற்சியினை வழங்கக்கூடிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 109,320 ஆகும். அதன் பிரகாரம் மாணவர்களின் சுமார் 44 சதவீதமான அளவினர் வருடாந்தம் பயிற்சியற்ற ஊழியப்படையினுள் உள்வாங்கப்பட நேர்ந்திருந்தது.

(இ) தகவல்களின் பிரகாரம் அமைச்சின் கீழுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 3,732 முழுநேர பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தேசிய தொழில்சார் தகைமையுடன் கூடிய (NVQ) பாடநெறிகளின் எண்ணிக்கை 2,532 ஆகும். அதன் பிரகாரம் NVQ இல்லாத பாடநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை குறைவடைவதுடன் உரிய நியமமொன்றில்லாமல் நடாத்தப்படும் பாடநெறிகளில் தரமான பயிற்சியொன்றினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அமைச்சின் கீழுள்ள தொழில் பயிற்சி பாடநெறிகளுக்காக மாணவர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் மாணவர்களின் பங்குபற்றல் தொடர்பிலான தெரிவுப் பரிசோதனையின் போது பயிற்சி பாடநெறிகளுக்கான மாணவர்களின் பங்குற்றலானது கவனத்திற்கொள்ளக்கூடிய குறைவான மட்டத்தில் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. 1822 பாடநெறிகளுக்காக 2015 ஆம் ஆண்டில் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிராமையும் 05 நிறுவனங்களின் 10 மாணவர்களை விட குறைந்த எண்ணிக்கையானோர் பங்குபற்றிய பாடநெறிகளின் எண்ணிக்கை 666 ஆக இருந்தமையால் அது உறுதியாகியது. அவ்வாறே அமைச்சின் கீழான தொழில் பயிற்சி நிறுவனங்களின் ஒரே பிரதேசத்தினுள் சமனான தன்மை கொண்ட நிகழ்ச்சித்திட்டங்ளை நடாத்தப்பட்டமையும் மேற்படி நிலமைக்கு காரணமாக அமைந்திருந்தது. அனைத்த பயிற்சி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அந்தந்த பிரதேசத்திற்குிய கைத்தொழில்களுக்குரிய விசேடத்துவமான துறைகளுக்குரியதாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்ததல், விசேட நிபுணத்துவம் கொண்ட நிறுவனங்களை உயர் தரத்தில் நடாத்திச் செல்வதற்குத்

தேவையான வசதிகளை வழங்குவதற்கு மத்தியப்படுத்தப்பட்ட வேலைத்திட்டமொன்று அமைச்சு மட்டத்தில் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) மேற்படி நிறுவனங்களால் பாடசாலையை விட்டுச் செல்லும் மாணவர்களின் தொழில் பயிற்சியினை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு NVQ பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த பாடநெறிகளுக்காக மாணவர்களின் ஈர்ப்பினை அதிகரிப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று உருவாகியிருக்கவில்லை.

(ஊ) அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு தொழில் பயிற்சி நிறுவனங்கள் பிரதேச ரீதியில் கேந்திரமாக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்ததன் காரணத்தால் மாணவர்களுக்கு தொழில் பயிற்சி நிலையங்களை தெரிவு செய்யும் போது சிக்கலான நிலைமையொன்றுடன் பிரதேசத்திற்கு உரித்தான கைத்தொழில்களுக்கான பயிற்சி பாடநெறிகள் இல்லாதிருந்தமையின் காரணத்தால் அமைச்சின் நோக்கங்களை அடைய முடியாதிருந்தது.

(எ) கல்விப் பொதுத்தராதரத்திற்காக (உயர்தர) தொழில்நுட்ப பாடநெறியை கற்பித்தல் தொடர்பில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் பணி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2013 யூலை 15 ஆந் திகதி முதல் நாட்டின் 251 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பொதுதராதர (உயர்தரம்) தொழில்நுட்ப பாட விதானத்திற்குரிய பொறியியல் தொழில்நுட்ப பாடத்தினை கற்பிப்பதற்கு திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் கீழான தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் 04 தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களின் ஆலோசகர்களை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சிற்கு 2013, 2014 மற்றும் 2015 ஆகிய மூன்று வருடங்களுக்காக ரூபா 27,187,210 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 142 பாடசாலைகளுக்காக ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக அவற்றுள் ரூபா 25,639,565 செலவிடப்பட்டிருந்தது.

(ii) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) தொழல்நுட்ப பாடத்தினை கற்று சித்தியடைந்த போதிலும் தேசிய பல்கலைக்கழகங்களுக்கான நுழைவிற்கு தகுதி பெறாத மாணவர்களுக்காக திறன்கள் துறைரீதியான அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் (SSDP Programme) 20 பல்கலைக்கழக பயிற்சிக் கல்லூரிகளை நாடெங்கிலும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டளவில் அவற்றில் 14 பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும், 2016 யூன் மாதம் வரையிலும் 06 பல்கலைக்கழக பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்பட்டு அவற்றுள் 05 இல் மாத்திரம் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நிலவும் இயலளவின் படி அந்த பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளக்கூடிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,260 மாத்திரமேயாகும். அதன் பிரகாரம் திட்டமிடப்பட்டவாறு பாடசாலை பாட விதானங்களுக்கு தொழில்நுட்ப பாடத்தினை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அந்த துறையினை தெரிவு செய்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு எதிர்கால தொழில் முன்னேற்றத்திற்கு தேவையான வசதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. பின்வரும் தகவல்களின் பிரகாரம், ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பல்கலைக்கழக பயிற்சிக் கல்லூரிகள் எதிர்பார்க்கப்பட்டவாறு முறையாக செயற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

- கல்விசார் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 42 சதவீதமான வெற்றிடங்கள் நிலவின.
- தற்போது நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள 06 பயிற்சிக் கல்லூரிகளில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 51 பாடநெறிகளில் 42 பாடநெறிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை.
- பல்கலைக்கழக பயிற்சிக் கல்லூரிகளில் பாடநெறிகளை விட்டுச்செல்லும் விகிதம் சுமார் 27 சதவீதமான இருந்தமை.

(iii) அரச கொள்கைகள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் சாதாரண தரம் மற்றும் உயர் தரங்களில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளை இலக்காக கொண்டு அங்கு இளைஞர் யுவதிகளுக்கு தமது சுய நிலைப்பாட்டினை கொண்டிருப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் உள்ள உரிமையினை உறுதிப்படுத்துவதற்கும் புத்தாக்க எண்ணம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் நோக்கில் வீறு கொண்ட இளைஞர்களுக்கு கை கொடுத்தல் எனும் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழான நிறவனங்கள், கல்வி அமைச்சு மற்றும் கலைஞர்களின் பங்களிப்புடன் நாட்டின் அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் 50 முதல் 75 இற்கு இடைப்பட்ட செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இரண்டு மாகாணங்களை மையமாகக் கொண்டு 8 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. இதற்காக அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 25 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 1,476,031 செலவிடப்பட்டிருந்தது.

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சிற்குரிய 46 வாகனங்களில் 12 வாகனங்கள் பழுதுபார்த்தல் அல்லது பயனற்றதென கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவற்றுள் 06 வாகனங்கள் தொழில்சார் பயிற்சி அதிகாரசபைக்கு பழுதுபார்ப்பதற்காக வழங்கப்பட்டு 1 முதல் 5 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனங்களை பழுதுபார்க்கும் போது முறையான நடைமுறையொன்றோ அல்லது முன் அங்கீகாரமோ பெற்றுக்கொள்ளப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிகாரம், பழுதுபார்க்கப்பட்ட அமைச்சின் வாகனமொன்றுக்காக செலவின மதிப்பீட்டினை அங்கீகரிப்பதற்கு முன்னர் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 41,300 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 26 | 20 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 437 | 365 | 72 |
| (iv) | ஆரம்ப நிலை | 42 | 37 | 05 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த/ அடிப்படை) | 04 | 01 | 03 |
| | **மொத்தம்** | **513** | **425** | **88** |